# CONVEYANCE ALLOWANCE - COLLEGE LECTURERS

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

கல்லூரிக் கல்வித்துறை- ஊர்திப்படி-உடல் ஊனமுற்ற பல்கலைக் கழக மானியக் குழு ஊதியம் பெறும் ஆசிரியர்களுக்கு ஊர்திப்படி (Conveyance Allowance) வழங்குதல் - ஆணைகள் வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (பி.2) த் துறை

அரசு ஆணை (நிலை) எண். 467 நாள் : 10-9-1998

படிக்கப்பட்டவை :

1) கல்லூரிக் கல்வி ஆணையரின் கடித ந. க. எண். 9906 / ஜே3 / 90, நாள் 28-8-92 மற்றும் 4-8-96
2) அரசு கடித எண். 48494 / ஜி2 / 96-2, நாள் 9-10-96
3) கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித எண். 76095 / ஒய்3/ 97. நாள் 6-11-97.

ஆணை :

ஐந்தாவது ஊதியக்குழுவின் அடிப்படையில், மாநில அரசு ஊழியர்களின் கண் பார்வையற்ற உடல் ஊனமுற்ற ஊழியர்களுக்கு ஊர்திப்படி ரூ. 50/- வழங்கலாமென அரசாணை எண். 667 நிதி (ஊ. கு) த்துறை. நாள் 27-6-89-ல் ஆணை வெளியிடப்பட்டது என்றும். பின்னர். அரசாணை எண்: 203. நிதித்துறை. நாள் : 16-3-93-ல் இவ்வூர்திப்படி ரூ. 50/- ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது என்றும். இந்த அரசாணை மாநில அரசின் உள்ளாட்சி மன்றங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் உட்பட அரசு மானியம் பெறும் உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர்களுக்கும் பொருந்துமென மேற்படி பத்தி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் பல்கலைக் கழக மானியக் குழு சம்பளம் பெறும் ஆசிரியர்களுக்கு பொருந்துமா எனக் கூறப்படவில்லை என்றும், எனவே இது குறித்து தெளிவுரை வழங்க வேண்டுமாறு பார்வை ஒன்று மற்றும் மூன்றில் கண்ட கடிதங்களில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே உள்ள கல்லூரிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை அரசு பரிசீலனை செய்தது.

3. அரசாணை எண். 667. நிதித்துறை. நாள் 27-6-89-ல் மாநில அரசு ஊழியர்களில் கண் பார்வையற்ற உடல் ஊனமுற்ற ஊழியர்களுக்கு ரூ. 50/- ஊர்திப்படி வழங்க (Conveyance Allowance) பொதுவாக ஆணையிடப்பட்டு. பிறகு அரசாணை எண். 203. நிதித்துறை. நாள் 16-3-93-ல் ரூ. 50/- லிருந்து ரூ. 75/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளதால், இந்த சலுகை மாநில அரசின் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுவதுபோல், பல்கலைக் கழக மானியம் பெறும் உடல் ஊனமுற்ற கல்லூரி ஆசிரியர்களுக்கும் ஆணை வெளியிடும் நாளிலிருந்து (Retrospective effect) இச்சலுகையினை வழங்கலாம் என அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண். 61030 / EMPC / 98. நாள் : 25-11-1998-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பி. செல்வம்.
அரசுச் செயலாளர்.

பெறுநர் :
கல்லூரிக் கல்வி இயக்குநர். சென்னை - 6.
சம்பளக் கணக்கு அலுவலர். சென்னை - 5 / 35 / 79
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
மாநிலக் கணக்காயர், சென்னை - 18
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்.
சென்னை / மதுரை / கோவை / திருநெல்வேலி திருச்சி வேலூர்.
நகல் :
நிதி (ஊ.கு 1)த் துறை. சென்னை -9.
நிதி (ஊ.கு.11)த் துறை. சென்னை-9.
நிதி (சி. எம். பிசி) த் துறை. சென்னை -9.
நிதி (கல்வி)த் துறை. சென்னை- 9.
உத்திரவுப்படி அனுப்பப்படுகிறது
பிரிவு அலுவலர்.